# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## க.பொ.த (உ/த)ப் பரீட்சை – 2019
## மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்கு

# இஸ்லாமிய நாகரிகம்

# இஸ்லாமிய நாகரிகம் (AI)
## வினாத்தாள் - II

**அறிவுறுத்தல்கள்**

பகுதி - I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி - II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து வினாக்களிற்கு விடை எழுதுக.

### பகுதி - II

01. 1) இஸ்லாமிய ஷரீ ஆவின் சிறப்பம்சங்கள் 4 தருக?
2) பல்லின சமூக வாழ்வில் ஒரு முஸ்லிம் கடைப்பிடிக்கும் ஒழுங்குகளைத் தருக?
3) இஸ்லாமிய நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதில் ஸுன்னாவின் பங்கை மதிப்பிடுக?
4) நவீன பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இஜ்திஹாத்தின் பங்கினை மதிப்பிடுக?
5) முஃதஸிலாக்களின் கொள்கைகளை சுருக்கமாக விளக்குக?

(4x5= 20 புள்ளிகள்)

02. 1) நபி (ஸல்) காலத்தில் அல்குர்ஆன் பாதுகாக்கப்பட்ட முறை பற்றி சுருக்கமாக விளக்குக?
2) போலி ஹதீஸ்கள் தோன்றியதற்கான காரணங்களை விளக்குக?
3) வானியல் துறையில் குவாரிஸ் இன் பங்கினை விபரிக்குக?
4) m/z எழுத்தாணிக் கலையில் ஈடுபடத்தூண்டிய அம்சங்களைத் தருக?
5) ஜாஹிலியாக் கால சமூகக் கட்டமைப்பினை விளக்குக?

(4x5= 20 புள்ளிகள்)

03. 1) இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலேயே இஸ்லாம் இலங்கையில் அறிமுகம் பற்றி சுருக்கமாகத் தருக?
2) சிங்கள மன்னர் காலத்தில் முஸ்லிம்களின் பொருளாதாரத் துறை சார்ந்த பங்களிப்புக்களைத் தருக?
3) கல்வி மறுமலர்ச்சியில் டி.பி.ஜாயா ஆற்றிய பங்களிப்பினைத் தருக?
4) மறுமை மனித வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கத்தைத் தருக?
5) உமையா ஆட்சியின் வீழ்ச்சிக்கான காரணங்களைப் பரிசீலிக்குக?

(4x5= 20 புள்ளிகள்)

### பகுதி - II

04. 1) தப அத்தாபியீன்கள் கால தப்ஸீர் வளர்ச்சியை மதிப்பீடு செய்க?
2) கியாஸின் முக்கியத்துவத்தை அல்குர்ஆன், ஸுன்னா துணையுடன் விளக்குக?

(10x2= 20 புள்ளிகள்)

05. 1) மருத்துவத்திற்கு பங்களிப்புச் செய்த முஸ்லிம் மருத்துவர்கள் இருவரின் பங்களிப்பினைத் தருக?
2) தஜ்வீத் என்பதன் மூலம் கருதப்படுவது யாது? விளக்குக?

(10x2= 20 புள்ளிகள்)

06. 1) மதீனா சாசனம் இஸ்லாமிய வளர்ச்சியில் ஆற்றிய பங்கினைத் தருக?
2) அபூபக்கர் (ரழி) அவர்கள் எதிர்கொண்ட சவால்களையும் தீர்வு கொண்ட விதத்தினையும் தருக?

(10x2= 20 புள்ளிகள்)

07. 1) இஸ்லாமிய சட்டத்துறையில் கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கான காரணங்கள் இரண்டினை விபரிக்குக?
2) கருத்து வேறுபாட்டின் போது பேணவேண்டிய ஒழுங்குகளைத் தருக?

(10x2= 20 புள்ளிகள்)

08. 1) கலீபா அப்துல் மலிக் இப்னு மர்வான் எதிர்கொண்ட சாவால்களையும், வெற்றி கொண்ட விதத்தினையும் விளக்குக.
2) அப்பாஸிய கிலாபத்தை ஸ்திரப்படுத்துவதில் அபூ ஜஃபர் அல் மன்ஸுர் அவர்களின் பங்கைச் சுருக்கமாக விளக்குக?

(10x2= 20 புள்ளிகள்)

## புள்ளி வழங்கும் திட்டம்

01\. 1. இஸ்லாமிய ஷரிஆவின் சிறப்பம்சங்கள்

❖ ஷரி ஆ அறிமுகம்

1) தெய்வீகத் தன்மை வாய்ந்தது
2) பூரணத்தரம் மிக்கது
3) பொதுத் தன்மை
4) யதார்த்த பூர்வமானது
5) நீதியானது
6) நடுநிலையானது
7) இலகுவானது

(அம்சங்கள் விளக்கி எழுதினால் 04 புள்ளிகள்)

2\. பல்லின சமூக வாழ்வில் முஸ்லிம் கடைப்பிடிக்கும் ஒழுங்கு

❖ பல்லின சமூகம் அறிமுகம்

1) அனைத்து மனிதர்களும் ஒரே இறைவனான அல்லாஹ்வின் படைப்பினமே
2) கொள்கை சுதந்திரம் - மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை (அல்குர்ஆன்)
3) மனித குலத்துக்கு நன்மை பயப்பது ஒவ்வொரு மனிதர் மீதும் கடமை.
4) எல்லா மனிதர்களும் சகோதரர்கள்
5) எல்லா மனிதர்களும் அடிப்படையில் நல்லவர்கள்
6) பரஸ்பரம் உதவி செய்ய வேண்டும்
7) எல்லோருடனும் பொதுவான முறையில் நடத்தல்

(04 அம்சங்களை விளக்கியிருப்பின் 04 புள்ளிகள்)

3\. இஸ்லாமிய நாகரிகத்தை கட்டி எழுப்புவதில் ஸுன்னாவின் பங்கு

❖ ஸுன்னா அறிமுகம்

❖ பல வகைகளில் நாகரிகத்தைக் கட்டி எழுப்ப ஸுன்னா பங்களிப்புச் செய்கின்றன.

1) அல்குர்ஆனுக்கு துணை நின்று வாழ்வியல் போதனைகளை முன் வைத்தல்
உதாரணமாக ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்கு ஆற்ற வேண்டிய ஐந்து விடயங்கள் எழுதல்.
2) ஆரோக்கியமான வாழ்வுக்கு வழிகாட்டல்களை முன்வைத்தல்
உதாரணம் - நீ எங்கிருந்தாலும் அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள் (ஹதீஸ்)
3) குடும்ப வாழ்வு பற்றிய போதனைகளை முன்வைத்து நாகரிகத்தைக் கட்டி எழுப்புவோம்
4) சமத்துவம், சகோதரத்துவம், நல்லிணக்கம் போன்ற போதனைகளை முன்வைத்தல்
5) நடைமுறை, பாவனை தொடர்பாகவும் விளக்கி நாகரிகத்தைக் கட்டி எழுப்ப உதவுதல்

(04 புள்ளிகள்)

4\. நவீன பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இஸ்திஹாத்தின் பங்கு

❖ இஜ்திஹாத் அறிமுகம்

❖ பல வகைகளில் நவீன பிரச்சினைகளைத் தீர்க்க இஜ்திஹாத் துணை புரிகிறது.

1) எல்லாக் காலப்பகுதிகளிலும் பிரதேச மாற்றங்களுக்கு ஏற்ப வரும் புதிய பிரச்சினையை தீர்க்க முடிதல்.
2) நவீன யுகத்தில் தொழிநுட்ப அபார வளர்ச்சியிலும் சவாலுக்குப் பதிலளிக்க முடிதல்.
3) இஸ்லாத்தின் உயிரோட்டத்தினை நிலைக்கச் செய்தல்
4) இஸ்லாத்துக்கு இயக்க சக்தியை வழங்குதல்
5) எக்காலத்துக்கும் இஸ்லாம் பொருத்தமானது என சான்று பகர்தல். (04 புள்ளிகள்)

5\. முஃதஸிலாக்களின் கொள்கைகள்

❖ முஃதஸிலாக்கள் அறிமுகம்

❖ முஃதஸிலாக்களின் பின்னணி

❖ கொள்கைகள்

1) தவ்ஹீத்
2) நீதி
3) இரு நிலைகளுக்கு இடைப்பட்ட நிலை
4) வாக்குறுதியும் தண்டனையும்
5) நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல்
6) அஸிபா வஸ்ஸிபாத் எதுவுமில்லை
7) சுவர்க்கம், நரகம் படைக்கப்படவில்லை. (04 புள்ளிகள்)

02. 1. நபிகளாரின் காலத்தில் அல்குர்ஆன் பாதுகாக்கப்பட்ட விதம்
- ❖ அல்குர் ஆன் அறிமுகம்
- ❖ பல்வேறு கால கட்டங்களிலும் அல்குர்ஆன் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. நபி காலத்தில் பாதுகாக்கப்பட்ட விதங்கள்

1) குத்தாபுல் வஹிகளால் எழுதப்பட்டமை
2) தொழுகைகளில் ஓதப்படல்- நீண்ட சூராக்களை ஓதுதல்.
3) மனனமிடல்
4) குர்ராக்களது பணிகள்
5) அஹ்லுல் பைத்களை அதிகம் தூண்டுதல்
6) யமாமா சமரில் 700 ஹாதீர்கள் மரணம்

2. போலி ஹதீஸ் தோன்றியதற்கான காரணங்கள்
- ❖ போலி அறிமுகம்
- ❖ பல்வேறு காரணங்களுக்காக போலி ஹதீஸ்கள் தோற்றம் பெற்றன

1) அரசியல் ரீதியான காரணங்கள்
2) இஸ்லாத்தின் எதிரிகளின் நடவடிக்கைகள்
3) மொழி, இனம், பிரதேசம், மஹ்ஹப், இமாம், வெறி கொண்டவர்கள் இட்டுக்கட்டியவை
4) உபதேசிகள் கதை வெறுப்பவர்கள் இட்டுக்கட்டியவை
5) ஆட்சியாளர்களது செல்வாக்கை தேடுவதற்காக உருவாக்கல்
6) விளம்பரத்துக்காக அறிவிக்கப்பட்டமை.

(04 புள்ளிகள்)

3. வானியல் துறையில் குவாரிஸ்மியின் பங்கு.
- ❖ வானியல் கலை அறிமுகம்
- ❖ பல இஸ்லாமிய அறிஞர்கள் வானியலில் பங்களிப்புக்களைச் செய்தவர்களுள் முக்கியமானவர்களாக அல்குவாரிஸ்மி, அல்பீரூன் போன்றோரைக் குறிப்பிடலாம்.

**அல் குவாரஸ்மி**
- ❖ வானியலில் தனக்கென ஓர் அத்தியாயத்தைப் படைத்தவர்
- ❖ கி.பி.9 ஆம் நூற்றாண்டில் புகழ் பூத்து நின்றவர்
- ❖ இவர் மத்திய ஆசிரியாவில் "கீவா" எனும் பகுதியில் ஹி - 167 இல் பிறந்தார்.
- ❖ அல் அப்துல்லாஹ் என்பது மறுபெயர்.
- ❖ இவரது பணிகள் சேவைகளுக்காக " அல்குவார்தம்" என ஐரோப்பிய உலகில் அழைக்கப்பட்டார்
- ❖ சிறந்த ஆளுமை மிக்கவர்
- ❖ மஃமூன் காலத்தில் பைதுல் ஹிக்மாவின் பொறுப்பாளராக இருந்தார்.
- ❖ ஏனைய துறைகளை விட வானியல் துறையில் அதிக ஈடுபாடு காட்டினார்.
- ❖ சித்தாந்த எனும் நூலை புதிதாக மொழிபெயர்த்ததோடு தமது அவதானக் குறிப்புக்களையும் எழுதியிருக்கின்றார்.
- ❖ இவரது வானியல் அட்டவணைகள் தொடர்பான விடயங்களை எடுத்துக்காட்டவும்.

( 04 புள்ளிகள்)

4. எழுத்தணிக் கலையில் ஈடுபடத் தூண்டிய அம்சங்கள்
- ❖ எழுத்தணிக்கலை அறிமுகம்
- ❖ அழகுணர்வு மனிதனோடு ஒட்டிப் பிறந்தது என்ற வகையில் அழகாக சிந்திக்கவும் பேசவும், வாழவும் மனிதன் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளான்.

1) அல்குர்ஆன் தூண்டுதல்
   படிப்பிரராகி, எழுது கோலைக் கொண்டு கற்பித்த உமதிறைவன் தூய்மையானவர் - அல்குர்ஆன்
   எழுது கோலின் மீதும் அதனைக் கொண்டு எழுதியவற்றின் மீதும் சத்தியராகி - அல்குர் ஆன்
2) ஸுன்னாவின் தூண்டுதல்
   "அழகிய எழுத்தில் எழுதுங்கள் அது உங்களுக்கு மகத்துவத்தைத் தரும்.
3) அல்குர்ஆனைப் பற்றிய மதிப்புணர்வு

அல்குர்ஆனை அழகாகவும், தெளிவாகவும் எழுதவும் அது நன்மை எனவும் கருதுதல்
4) அழகியல் சிந்தனையை வெளிக்காட்ட அங்கீகாரம் பெற்ற ஊடகம் அவசியம். (04 புள்ளிகள்)

5. ஜாஹிலியாக் கால சமூகக் கட்டமைப்பு
- ❖ மனித சிந்தனைகளின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டது.
- ❖ பல தெய்வக் கோட்பாடு
- ❖ மனோ இச்சையின் அடிப்படையிலான செயற்பாடுகள்
- ❖ கோத்திர உணர்வை முதன்மைப்படுத்திய சமூகம்
- ❖ சுயநலம், சுரண்டல் நிறைந்த சமூகம்
- ❖ கோத்திர தலைமைத்துவத்துக்குக் கட்டுப்பட்டது. (04 புள்ளிகள்)

03.1. இலங்கையின் இஸ்லாத்தின் அறிமுகம்
- ❖ அரேபியரின் கிழக்கு மேற்கு வர்த்தகப் பாதையில் இலங்கை அமைந்திருந்தது
- ❖ கி.பி.628 இல் வஹப் இப்னு அபி ஹப்ஷா
- ❖ இரண்டாம் அக்கபோதியின் நடவடிக்கை
- ❖ காலிக் இப்னு பகாயாவை அனுப்புதல்
- ❖ ஹஜ்ஜாஜின் கொடுமையால் இலங்கையில் குடியேறுதல் (04 புள்ளிகள்)

2. ❖ முஸ்லிம்களின் பொருளாதாரப் பங்களிப்புக்கள்
- ❖ அநுராதபுர காலத்தில் சர்வதேச வர்த்தக நடவடிக்கையை மேற்கொண்டு அந்நியச் செலாவணி பெற உதவுதல்.
- ❖ உள்ளூர் விவசாய கால்வாய், குளங்கள் புனரமைப்புக்கு உதவுதல்
- ❖ பொலன்னறுவைக் காலத்தில் கொழும்பு வளர்ச்சியடைந்து துறைமுக நகரங்களாகத் திகழல்
- ❖ இலங்கையில் உள்ள இரத்தினக் கற்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல்.
- ❖ பெருந்தோட்டத்துறைக்கு உதவுதல் . (04 புள்ளிகள்)

3 T.P ஜாயாவின் பங்கு
- ❖ T.P ஜாயா அறிமுகம்
- ❖ முஸ்லிம்களது, அரசியல். கல்வி, கலாசாரத் துறைகளை முன்னேற்ற உழைத்தல்
- ❖ கொழும்பு ஷாஹிராவின் அதிபர்
- ❖ மாணவர்கள்மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்
- ❖ ஸாகிராவை மையப்படுத்தி பல சமூகப் பணிகள் செய்தார்
- ❖ ஏனைய சமூகத்துக்கும் கல்வி கற்க வாய்ப்பு (04 புள்ளிகள்)

4. மறுமையின் தாக்கங்கள்
- ❖ கஷ்டத்தை சகித்துக் கொள்ளுதல்
- ❖ மன உறுதியுடன் சுறுசுறுப்பானவராக மாற்றுதல்
- ❖ மறுமையின் உயர்பெறுபேற்றைப் பெற தூய்மையாக நடத்தல்
- ❖ தக்வா ஏற்படல்
- ❖ பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்தல் (04 புள்ளிகள்)

5. உமையா ஆட்சியின் வீழ்ச்சிக்கான காரணங்கள்
- ❖ கலீபாக்களின் பலவீனம்
- ❖ குழு உணர்வுகள். முரண்பாடுகள்
- ❖ அப்பாஸியரின் தீவிர பிரச்சாரம்
- ❖ ஒழுங்கற்ற வாரிசு
- ❖ சமய விவகாரங்களில் அறிவின்மை

(04 புள்ளிகள்)

4. 1 தப அத்தாபி ஈன்கள் கால தப்சிர் பங்களிப்பு
- ❖ கி.மு.1 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியைக் குறிக்கும்.
- ❖ தப்சிர் கலைக்கான நூல் உருவாக்கப்பட்டமை. அபுல் ஆலியா என்பவரின் தப்சிர் கலைக்கான முதல் நூல்.
- ❖ பர்உ இத்துறையில் ஈடுபாடு
- ❖ தர்ஸித் இலக்க அடிப்படையில் ஒழுங்கமைக்கப்படல்
- ❖ இக்கால தப்சிர்கள் - ஆசிரியர்கள் (10 புள்ளிகள்)

2. ❖ கியாஸின் முக்கியத்துவம்
❖ கியாஸ் அறிமுகம்
❖ இஜ்திறாத்தின் ஊடாகப் பிறந்த மூலாதாரம்
❖ " பூமியில் பிரயாணம் செய்து முஷ்............... முடிவு எவ்வாறு
❖ "உயிர்போன நிலையில் உயிர்ப்பவன் அவனே மீண்டும் உயிர்ப்பிப்பான்...
❖ முஆக் இப்னு ஜால் யமனுக்கு அனுப்பும் போது உரையாடல்
❖ உமர் (ரலி) நோன்பு நோற்ற நிலையில் மனைவியை முத்தமிடல்....
தொடர்பான தீர்ப்பு (10 புள்ளிகள்)

05. 1. **மருத்துவத் துறையில் பங்களிப்பு**
**அலி இப்னு ஸினா**
❖ இவர் சகல துறைகளிலும் ஆர்வம் கொண்டவர்
❖ மருத்தவத் துறையில் சிறப்பிடம் பெற்றவர்
❖ ஆரம்பத்தில் கணிதத்தில் ஈடுபாடு காட்டி பின்னர் அபூ அப்துல்லா அன் நாதிலி என்பவரிடம் மருத்துவம் பயின்றார்.
❖ 17 வயதில் மருத்துவ மேதை என போற்றப்பட்டார். இவரின் நூல்கள்
1. கானூன் பித்திப்பி 2. கிகாபுஷ் ஷிஷிபா
❖ இவர் கலன் அர்ரஸாக் போன்றவரின் கருத்துக்களை ஆராய்ந்துள்ளார்.
❖ நரம்பியல் நிபுணரான இவர் மருத்துவத்தின் தந்தை எனப் பெயர் பெற்றார்.

**இப்னு நபீஸ்**
❖ இவர் இஸ்லாமிய சட்டம். அளவையியல், தத்துவம், ஹதீஸ் கலை. அரபு இலக்கண இலக்கியங்களைக் கற்றிருந்தார்.
❖ டமஸ்கஸ் மருத்துவமனை, எகிப்தில் அமைத்த மருத்துவமனை என்பவற்றிலும் பிரதம வைத்தியராகச் செயற்பட்டார்.
❖ ஹிப்போக்ரடீஸ், இப்னு ஸினா போன்றோரின் மருத்துவ நூல்களுக்கு விளக்கம் எழுதியுள்ளார்.
❖ கண் நோய் குருதிச் சுற்றோட்டம் பற்றி விளக்கியுள்ளார்.
❖ இவரின் நூல்கள் ✦ கிதாபுல் முக்தார்

(10 புள்ளிகள்)

2. தஜ்தீத் என்பதனால் கருதப்படுவது யாது?
❖ தஜ்தீத் அறிமுகம்
❖ இஸ்லாமிய சமூகத்தில் கொள்கைகள் தவறாகப் புரியப்பட்டு சமூக வாழ்வு அரசியல்.... பொருளாதார பலவின நிலை உருவாகி இச் சூழலை மாற்றி சீர்திருத்தம் செய்யப்படுவதை இது குறிக்கிறது.
❖ சமூகத்தில் தோற்றம் பெற்றுள்ள அனாச்சாரங்களைக் களைந்து இஸ்லாத்தை அதன் தூய உருவில் நடைமுறைப்படுத்தல்
❖ நபியவர்கள் போதித்த இஸ்லாமிய நெறி முறைகளுக்கு செயல் வடிவம் கொடுத்து மீண்டும் அவற்றை உயிரூட்ட மேற்கொள்ளும் முயற்சி.
❖ நவீன உலக சவால்களை விளக்கி நவீன கோட்பாடுகளினால் மனித குலம் எதிர்கொண்டுள்ள பாரிய அழிவுகளை எடுத்துக் காட்டல். (10 புள்ளிகள்)

06.1. மதீனா சாசனத்தின் பங்கு
❖ மதீனா ஹிஜ்ரத்தைத் தொடர்ந்து அரசியல் ரீதியாக மதீனா சாசனம் நிறுவப்படல்.
இதன் முக்கியத்துவம்
❖ நபியவர்களின் தலைமைத்துவத்திற்கு முஸ்லிம் அல்லாதவரும் கட்டுப்படும் நிலை.
❖ இரத்தம் சிந்தும் நிலை தவிர்க்கப்பட்டு அமைதி நிலவுதல்.
❖ இஸ்லாமிய குடியரசு விஸ்திரமாதலும் இஸ்லாம் பரவலாகலும்
❖ சமய வேறுபாடு அற்ற முறையிலான குடியியல் உரிமை சகலருக்கும் வழங்கப்படல்

- ❖ உரிமைகளுக்காக யாரும் குரல் கொடுக்காது நிறைவான மனித உரிமையைப் பெறல். (10 புள்ளிகள்)

2. அபூ பக்கர் (ரழி) எதிர் கொண்ட சவால்கள்
   - ❖ உஸாமா தலைமையிலான படையை உரோமப் பகுதிக்கு அனுப்பி வைத்தல்.
   - ❖ ஸக்காத் கொடுக்க மறுத்தோர் தோன்றல்
   - ❖ போலி நபிமார் உருவாகுதல்
   - ❖ குர் ஆன் தொகுக்கப்படுவதன் அவசியம். (10 புள்ளிகள்)

07.1. ❖ கருத்து வேறுபாடு தோன்றுவதற்கான காரணம்
   - ❖ ஒரு குறிப்பிட்ட ஹதீஸை உறுதிப்படுத்துவதில் உண்டாகும் கருத்து வேறுபாடு.
   - ❖ சட்ட வசனத்தை விளக்குவதில் ஏற்படும் கருத்து முரண்பாடு.
   - ❖ முரண்பட்ட சட்ட வசனங்களிடையே இணக்கம் காண்பதிலும் அவற்றில் ஒன்றை உறுதிப்படுத்துவதிலும் ஏற்படும் கருத்து முரண்பாடு.
   - ❖ சட்டவாக்க மூலாதார விதிகளில் காணப்பட்ட கருத்துவேறுபாடு.

(10 புள்ளிகள்)

2. கருத்து வேறுபாட்டின் போது பேணவேண்டிய ஒழுங்குகள்.
   - ❖ கருத்து ஒற்றுமையான விவகாரங்களில் பரஸ்பரம் ஒத்துழைத்தல்
   - ❖ கருத்து வேறுபாடான விடயங்களில் விட்டுக் கொடுத்தல்
   - ❖ ஒருவரை ஒருவர் சாடாது இருத்தல், மதித்து நடத்தல்
   - ❖ மத்ஹப்பில் பிடிவாத போக்கைத் தவிர்த்தல்
   - ❖ அடுத்தவர் பற்றிய நல்லெண்ணத்தை வளர்த்தல்
   - ❖ விவாதங்களை முடிந்தளவு தவிர்த்தல் (10 புள்ளிகள்)

08.1. அப்துல் மலிக் இப்னு மர்வான்
   - ❖ வாரிசு முறையைப் புறக்கணித்து கலீபா தெரிவு முறை கோட்டிற்பாட்டிற்கு முன்னுரிமை அளித்தல்
   - ❖ ஆடம்பர அரசியலைத் தடுத்து எளிமையைக் கையாளுதல்
   - ❖ மஜ்லி சுல் ஸூரா அறிவும், இறையச்சமும் கொண்ட மனிதனால் இயக்கியமை.
   - ❖ திம்மிகளுக்கு உரிமைகளை வழங்கியமை.
   - ❖ கோத்திர வேறுபாடு கலைந்து சகலருக்கும் சமஅந்தஸ்து வழங்கியமை.
   - ❖ தகுதி உடையோருக்கு மாத்திரம் பதவி வழங்கியமை
   - ❖ காலித் பின் யஸீத் ஆட்சிக்கு உரிமை கோரியமை
   - ❖ கவாரிஜ்களது கிளர்ச்சி
   - ❖ எல்லைப் புறங்களில் ஊடுருவும் உரோமர்களது நடவடிக்கைகள்
   - ❖ காலித்துக்குப் பக்கபலமாக இருந்த உமர் இப்னுஸைதை கொலை செய்து காலித்தை தன்னோடு இணைத்துக் கொள்ளல்.
   - ❖ தளபதி முஹல்லபின் தலைமையில் அனுப்பி வைக்கப்பட்ட அரச படை கவாரிஜ்களது பலத்தை முறியடித்தமை.

(10 புள்ளிகள்)

2. கிலாபத்தை விஸ்திரப்படுத்த அபூ ஜவ்பர், அபூ மன்ஸுரின் பங்களிப்புக்கள்
   அப்துல்லா இப்னு அலியின் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருதல்
   முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் வின் கிளர்ச்சியை அடக்குதல்
   அபூ முஸ்லிம் ஹூராசானியை ஒழித்துக்கட்டுதல்
   உள்நாட்டுக் கிளர்ச்சியை அடக்கியமை
   புதிய நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தல்
   பக்தாத் நகரை நிர்மாணித்தமை